# சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம்

## மெட்ரோ இரயில் நிலையங்களில் புதிய இணைப்பு சேவை மற்றும் மின் ஊர்திகளுக்கான மின்னேற்றும் வசதிகளைத் துவக்கி வைத்தல்

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. எம்.சி. சம்பத் அவர்கள் இன்று **(05–08–2019)** நந்தனம் மெட்ரோ இரயில் நிலையத்தில் சீருந்து இணைப்பு சேவை மற்றும் மின் ஊர்திகளுக்கான மின்னேற்றும் வசதிகளை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சிக்கு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.பங்கஜ் குமார் பன்சல் இ.ஆ.ப. தலைமை வகித்தார்.

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-I இன் கீழ் மொத்தம் 45 கி.மீ நீளத்திலான இரண்டு வழித்தடங்களிலும், 10–02–2019 முதல் முழுமையாக பயணிகள் சேவை நடைபெற்று வருகின்றது. மெட்ரோ இரயில் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக, வீட்டிற்கும் மெட்ரோ நிலையங்களுக்கும், அவர்கள் பணிபுரியும் இடங்களுக்கும் இடையே பயணிகளுக்கு இணைப்புப் போக்குவரத்து வசதியை ஏற்படுத்தித்தர சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. அதில் இணைப்பு போக்குவரத்து சேவைகள், நடைபாதைகளை மேம்படுத்துதல் மற்றும் மெட்ரோ இரயில் நிலையங்களுக்கு விடுபட்ட இணைப்பு பாதைகளை அமைத்தல் ஆகியவை முக்கியமானவையாகும்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், திருவாளர்கள் பெங்களூரு மெகா கேப்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்துடன் இணைந்து, கட்டம் I இல் இயக்கப்படும் அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்களுக்கும் செயலி வழியாக சீருந்து இணைப்பு சேவைகளை வழங்க உத்தேசித்துள்ளது. இதற்கான செயலியை 'போர்டு மொபிலிட்டி' தயாரித்து அளித்துள்ளது. இந்த இணைப்பு சேவை ஒவ்வொரு மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்தும் 6 முதல் 8 கி.மீ தூரம் வரை செயல்படுத்தப்படும். மெட்ரோ இரயில் பயணிகளை மெட்ரோ நிலையங்களிலிருந்து ஏற்றிக் கொண்டு அவர்கள் சேரிடங்களில் இறக்கி விடப்படுவார்கள். இந்த வசதியைப் பயன்படுத்துவதற்கான ஒரே கட்டணம் ரூ.10/-

ஆகும். சென்னை மெட்ரோ இரயில் பயண அட்டை மற்றும் செயலி மூலமாக இதற்கான கட்டணத்தைச் செலுத்தி இந்த வசதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

முதற்கட்டமாக சென்னை சென்ட்ரல், அரசினர் தோட்டம், எல்.ஐ.சி, ஆயிரம் விளக்கு, ஏஜி.டிஎம்எஸ் மற்றும் நந்தனம் மெட்ரோ நிலையங்களில் செயல்படுத்தப்படும் இந்த இணைப்புச் சேவையை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. எம்.சி. சம்பத் அவர்கள் இன்று **(05–08–2019)** நந்தனம் மெட்ரோ இரயில் நிலைய வளாகத்தில் துவக்கி வைத்தார். இந்த வசதி எஞ்சியுள்ள அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்களுக்கும் விரிவு படுத்தப்படும்.

சென்னை நகரில் பசுமைப் போக்குவரத்தினை ஊக்குவிப்பதற்காக, மத்திய அரசின் நிறுவனமான எனர்ஜி எபிசியன்சி சர்வீசஸ் லிமிடெட் நிறுவனத்துடன் இணைந்து, மின் ஊர்திகளுக்கான மின்னேற்றும் வசதிகளை **26** மெட்ரோ இரயில் நிலையங்களின் வாகன நிறுத்துமிடங்களில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் தொடக்கமாக, நந்தனம் மெட்ரோ இரயில் வாகன நிறுத்துமிடத்தில் சீருந்து, இரண்டு மற்றும் மூன்று சக்கர மின் ஊர்திகளுக்கான மின்னேற்றும் வசதியையும் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்.

மேற்கண்ட நிகழ்வுகளில் திருமதி. சுஜாதா ஜெயராஜ், இயக்குநர் (நிதி), திரு. ராஜீவ் நாராயன் திவேதி, இயக்குநர் (திட்டங்கள்) மற்றும் திரு. எல். நரசிம் பிரசாத் இயக்குநர் (பொறுப்பு) (இயக்கம் மற்றும் அமைப்புகள்), தலைமைப் பொது மேலாளர்கள், பெங்களூரு மெகா கேப்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் துணைத்தலைவர் (இயக்கம்) திரு. சஞ்சீவ் ராணா , எனர்ஜி எபிசியன்சி சர்வீசஸ் லிமிடெட்டின் கூடுதல் பொது மேலாளர் திருமதி. சாவித்திரி சிங் மற்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்களும் கலந்து கொண்டார்கள்.